2. தகவல் கோரல்.

(அ) இலங்கையில் வாழும் தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவுக்குத் திரும்ப வேண்டுமென்று இலங்கை அமைச்சர் பேசியுள்ளது குறித்தும் தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் நடமாட்டமும் நடவடிக்கைகளும் இருப்பதாகக் கூறப்படுவது குறித்தும்.

* திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய இசைவோடு இரண்டு முக்கியமான பிரச்சினைகளைப் பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து விளக்கம் பெற விரும்புகிறேன்.

ஒன்று, இலங்கை அரசினுடைய தோட்டத் தொழிலாளர் துறை அமைச்சர் மாண்புமிகு ரஞ்சன் விஜயரத்னே, அண்மையில் வெளியிட்டு இருக்கக்கூடிய கருத்து, அங்கே இருக்கக்கூடிய சுமார் 1 லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவிற்கு உடனடியாகத் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்றும், அவர்கள் திரும்பிச் செல்லாவிட்டால், அவர்களுக்கு இலங்கையிலே வேலை வாய்ப்பு மறுக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அங்கே இருக்கக்கூடிய தோட்டத் தொழிலாளர் காங்கிரசினுடைய தலைவராக இருக்கக்கூடிய திரு. தொண்டமான் அவர்கள் இன்றைக்கு இருக்கக்கூடிய அந்தத் தோட்டத் தொழிலாளர்கள், அவர்கள் இந்தியாவிற்குத் திரும்பி வர விருப்பம் தெரிவிக்கவில்லை. அவர்களுடைய மூதாதையர்கள், பெற்றோர்கள் அல்லது பாட்டனார்கள் தெரிவித்திருப்பார்களே தவிர, இவர்கள் அங்கே தான் தங்க விரும்புகிறார்கள், இந்தப் பிரச்சினையை மனிதாபிமானத்தோடு கூடிய கண்ணோட்டத்தோடு அணுக வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்தபோது மாண்புமிகு இலங்கை அமைச்சர் அவர்கள், இவர்கள் யார் இந்த இந்தியக் குடிமக்களாக இருக்கிற, இந்தியப் பிரஜைகளாக இருப்பவர்களைப் பற்றிப் பேசுவதற்கு என்று கடுமையாகக் கேட்டு இருப்பதோடு மட்டுமல்லாமல், அதன் காரணமாக இலங்கை அரசியலிலே ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்படக் கூடும் என்று கேட்டபோது, அதைப்பற்றிக் கவலையில்லை என்று கூட சொல்லியிருக்கிறார்கள். இதன் காரணமாக அங்கே ஒரு கொந்தளிப்பான நிலைமை ஏற்புட்டு இருக்கிறது. இன்னொரு கருத்துக்கூட அங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. 1983 முதல் அங்கே இலங்கைக் குடிமக்களாக இருப்பவர்கள் இந்தியாவிற்கு ஏராளமாகத் திரும்பியிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணிக்கையோடு சரி செய்து, அங்கே தங்க விரும்பக்கூடிய தோட்டத் தொழிலாளர்களை அங்கே தங்க வைக்கலாம் என்ற அணுகுமுறையைக் கூட அவர்கள் மறுத்திருக்கிறார்கள். ஆகவே இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பான நிலைமை ஏற்படுவதற்கு மத்திய அரசோடு கலந்து பேசி, மாநில அரசாங்கம் நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று கேட்க விரும்புகிறேன். இது ஒன்று.

[திரு. உ. ரா. வரதராசன்] [1990 மே 8

(10-05 மணி)

இரண்டு, நேற்றைய தினம் நாடாளுமன்றத்திலேயும் எழுப் பப்பட்டிருக்கக் கூடிய ஒரு நிலை, இன்றைய பத்திரிகைச் செய்தியிலே வந்திருக்கக் கூடியது, தமிழ்நாட்டிலே விடுதலைப் புலிகள் எல்.டி.டி. யினர் ஊடுருவி விடாமல் எச்சரிக்கையாக இருக்குமாறு மாநில அரசை மைய அரசினுடைய உள்துறை கோரியுள்ளதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. இது குறித்து ஏப்ரல் மாதம் மூன்றாவது வாரத்திலேயே தமிழகத்தினுடைய தலைமைச் செயலாளர் மற்றும் டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் ஆகியோருடன் உள்துறைச் செயலாளர் தொடர்பு கொண்டு பேசியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த விடு தலைப் புலிகள் தமிழ்நாட்டில் உள்ள அரசு அதிகாரிகளை, சுங்கத் துறை அதிகாரிகளை, இமிகிரேஷன் அதிகாரிகளை எல்லாம் மிரட்டுவதாகவும் கூட அங்கே நாடாளுமன்றத்திலே செய்திகள் கூறப்பட்டுள்ளன. அதை இன்னும் கொஞ்சம் மிகைப்படுத்தி தமிழகமே புலிகளுடைய கட்டுப்பாட்டிற்குள்ளே வந்துவிட்டது என்றும், தமிழ்நாட்டில் புலிகள் நடமாட்டத்தால் பஞ்சாப் போன்ற நிலைமை உருவாகிவிடும் என்றெல்லாம் கூட நாடாளுமன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மிகை யான குற்றச்சாட்டுகளில் சில அரசியல் உள்நோக்கம் இருக்க லாம். இருந்தாலும்கூட, இந்தப் பிரச்சினையிலே மாநில அரசிற்கும் மைய அரசிற்கும் ஒரு வித்தியாசமான அணுகுமுறை இருப்பது போன்ற ஒரு தோற்றம் எழுந்திருக்கிறது. எனவே தமிழகத்திலே விடுதலைப் புலிகளுடைய நடமாட்டம், நட வடிக்கைகளைப் பற்றி இந்த அரசு எச்சரிக்கையாகவும், கண் காணிப்பாகவும் இருக்க வேண்டும்.

இதே அவையிலே மீனவர்கள் கடத்தலைப் பற்றி வந்த போது, தமிழக முதலமைச்சர் அவர்கள் புலிகளுக்கு ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறார்கள். இருந்தாலும் இதிலே கொஞ்சம் கண்காணிப்பாகவும், கறாராகவும் இருக்கவேண்டு மென்பதை வலியுறுத்தி அதைப்பற்றி விரிவான விளக்கத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராசன் அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்கு ஒரு சிறு விளக் கத்தைத் தெரிவிக்கின்றேன்.

1984ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ஆம் நாள் அன்றைய நிலவரப்படி நாடற்றவர்களாகக் கருதப்பட்ட 9.75 இலட்சம் பேர் இலங்கையிலே இருந்தவர்கள், அவர்கள் இந்திய மக்களின் வழிவந்தவர்களாகையால் இந்திய-இலங்கை நாடுகளுக்கிடையே 31—10—1984 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இது 1965-ஆம் ஆண்டு சாஸ்திரி-சிரிமாவோ ஒப்பந்தத்தினுடைய அடிப்படையில் மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெற்று 31—10—1984-ல் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி

1990 மே 8] [டாக்டர் மு. கருணாநிதி]

5.25 இலட்சம் பேருக்குக் குடியுரிமை வழங்க இந்தியா ஒப்புக் கொண்டது. அதாவது இங்கே திருப்பி அழைத்துக்கொள்ள இந்தியா ஒப்புக்கொண்டது. பின்னர், 27—1—1974-அன்று உருவாக்கப்பட்ட பிறிதொரு ஒப்பந்தப்படி மேலும் 75,000 பேருக்குக் குடியுரிமை வழங்க இந்தியா-இலங்கை ஏற்கனவே ஒப்புக்கொண்டன. இவ்வாறு இரண்டு ஒப்பந்தங்களின் அடிப் படையில், 6 இலட்சம் பேரை இந்தியா எடுத்துக்கொள்வதென ஒப்புக்கொள்ளப்பட்டது. 6 இலட்சம் பேர் என்றால், அப்படி ஒப்பந்தம் ஆனபிறகு அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்தால் அதையும் சேர்த்து, அதைத்தான் அவர்கள் இயற்கை உற்பத்தி யுடன் என்று இணைத்துச் சொல்கிறார்கள். அவர்களையும் சேர்த்து, 6 இலட்சம் பேரை சேர்த்து எடுத்துக்கொள்வது என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கிடையில் இலங்கையில் ஏற்பட்ட 1983-ஆம் ஆண்டு இனக் கலவரத்தையொட்டி 1986-ல் மீண்டும் ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபோது மேலும் 94,000 பேருக்குக் குடியுரிமை வழங்க இலங்கை அரசு ஒப்புக்கொண்டது. எனவே, இந்தியா எடுத்துக்கொள்ள வேண்டிய மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்திலிருந்து 5.06 இலட்சமாகக் குறைந்தது. இதுவரையில் 3.34 இலட்சம் பேர் இன்றைக்கு இந்தியாவிற்குத் திரும்பியிருக்கிறார்கள். மேலும் திரும்ப வேண்டியவர்கள் என்று இலங்கை அரசு கூறுவது 1.72 இலட்சம் பேர். அதாவது அவர்களுடைய இயற்கை அதிகரிப்போடு 1.72 இலட்சம் இருந்தாலும், பிறகு அவர்களுக்கு குழந்தைகள் பிறந்தால், அவர்களையும் சேர்த்து அவர்கள் இந்தியாவிற்குத் திரும்ப வேண்டுமென்ற ஒரு நிலை. இதற் கிடையே நம்முடைய உறுப்பினர் அவர்கள் எடுத்துக்காட்டிய தைப்போல இலங்கை அமைச்சர் அங்குள்ள நாடற்றவர்கள் என்று கருதப்படுகின்ற ஏறத்தாழ $1\frac{3}{4}$ இலட்சம் அல்லது 2 இலட்சம் பேரை இந்தியாவிற்குத் திருப்பி அனுப்ப வேண்டுமென்று அறுதியிட்டுக் கூறியிருக்கிறார். இந்தச் சூழ் நிலையிலே இந்தியா, அதிலும் குறிப்பாக தமிழ்நாடு தான் அந்தப் பெரும் சுமையைத் தாங்கவேண்டுமென்ற நிலையில் ஏற்பதற்கு நாம் தயார் நிலையிலே இல்லை. காரணம் ஈழத் தமிழர் பிரச்சினையால் 1983 முதல் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட ஈழத் தமிழர்கள் தமிழ்நாட்டில் அகதிகளாக இருக் கிறார்கள்.

(10-10 மணி)

இது குறித்து ஏற்கனவே முன்னாள் முதலமைச்சர் அருமை நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் கூட இந்தியப் பிரதமருக்கு 22—2—1986ல் எழுதிய கடிதத்தில் திட்டவட்டமாக அதிலே கூறியிருக்கிறார். இங்கே உள்ள இலங்கை அகதிகள், ஈழத் தமிழ் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்ட பிறகு தான் அங்கிருந்து வருகின்ற தமிழர்களை ஏற்பது பற்றி யோசிக்க முடியும் என்று இந்தியப் பிரதமருக்கு ஏற்கனவே முன்னாள் முதலமைச்சர் கடிதம் எழுதியிருக்கிறார். அதே நிலைதான் இன்றைக்கு இந்த அரசும் எடுக்கின்ற திட்டவட்டமான நிலையாகும்.

அப்படியே ஏற்பதாக இருந்தாலும் திடீரென்று லட்சத்திற்கு மேற்பட்டவர்களை தமிழகத்திலே குறிப்பாக, இந்தியாவிலே ஏற்றுக்கொள்வது என்பதும் அவர்களை வைத்து சமாளிப்பது, அவர்களுக்கு வாழ்வு அளிப்பது, மறுவாழ்வு தருவது என்பதெல்லாம் பெரிய பிரச்சினை. சிறிது, சிறிதாகத்தான் அவர்களை நாம் ஏற்றுக்கொள்ள இயலும். இருந்தாலும் இங்குள்ள இலங்கைத் தமிழ் அகதிகள், ஈழத் தமிழ் அகதிகள் ஒரு இலட்சம் பேர் திருப்பி அனுப்பப்பட்ட பிறகு தான் அதை நம்மால் யோசிப்பதற்கே இயலும். இதை மத்திய அரசுக்கு நாம் தெரிவித்திருக்கிறோம். நம்முடைய தலைமைச் செயலாளர் நேரடியாகவே டெல்லிக்குச் சென்று இந்தக் கருத்தை அங்குள்ள செயலாளரிடத்திலே அறிவித்திருக்கிறார். அவர்கள் குறிப்பிட்டதைப் போல, அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது என்பது மனிதாபிமான அடிப்படையிலே செய்யப்பட வேண்டிய ஒன்று, எனவே ''ரிபேட்ரியாட்ஸ், ரெஃபூஜிஸ்'' இரண்டுக்கும் வித்தியாசம் உண்டு. ரிபேட்ரியாட்ஸ் என்பது அங்கு குடியுரிமை இல்லாமல் இங்கே குடியுரிமை பெறவேண்டியவர்கள். ரெஃபூஜீஸ் (அகதிகள்) அவர்கள் திரும்பிச் செல்ல வேண்டியவர்கள். ரிபேட்ரியாட்ஸ் என்றால் வந்தவர்கள் திரும்பிச் செல்லவேண்டிய அவசியம் இல்லை. இங்கே குடியுரிமை அவர்களுக்கு வழங்கப்பட்டு, மறுவாழ்வு அளிக்கப்பட வேண்டியவர்கள். அகதிகள் என்றால் அவர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டியவர்கள். இந்த வித்தியாசம் இருந்தாலும்கூட ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட அகதிகளைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற தமிழகம் மேலும் இந்தச் சுமையைத் தாங்கத் தயாராக இல்லை என்ற கருத்து மத்திய அரசுக்கு எடுத்து விளக்கப்பட்டு இருக்கிறது. தொடர்ந்து அது வலியுறுத்தப்படும். மத்திய அரசோடு பேசப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்று, டெல்லி பாராளுமன்றத்திலே எழுப்பப்பட்ட பிரச்சினை குறித்து நண்பர் வரதராசன் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அண்மையிலே இந்த அவையில் பல நேரங்களிலே இது குறித்து பல கட்சிகளுடைய நண்பர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்கான விளக்கங்களை. நான் தந்திருக்கிறேன். ஏதோ மத்திய அரசு மாநில அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருப்பதாகவும், மாநில அரசு அதிகாரிகள், தலைமைச் செயலாளர் மற்றும் டி.ஜி.பி. போன்றவர்கள் இது விஷயத்திலே எச்சரிக்கப்பட்டு இருப்பதாகவும் அதை அவர்கள் இன்னும் கேட்கவில்லை என்றும் பத்திரிகையிலே வந்திருக்கின்ற செய்திகள், டெல்லியிலே ''டைம்ஸ் ஆப் இந்தியா'' என்ற ஒரு பத்திரிகையில் இந்தச் செய்திகள் மிகைப்படுத்தி வேண்டுமென்றே போடப்பட்டிருக்கின்றது. நேற்றைய தினம் நண்பர் ரமணி அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல், எதையாவது ஒன்றை வைத்துக்கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு தொல்லை தருவது அல்லது ஆட்சியை சட்டம்-ஒழுங்கு,

1990 மே 8] [டாக்டர் மு. கருணாநிதி]

அமைதி இவைகளைக் காட்டி கவிழ்ப்பது என்கின்ற அற்ப ஆசைக்கு சில பேர் ஆட்பட்டு இப்படி எழுதியும், பேசியும் வதந்திகளைப் பரப்பியும் வருகிறார்கள். அந்த வதந்திகளை நம்பியோ, என்னவோ அல்லது வேண்டும் என்றோ எனக்குத் தெரியாது. நான் பாராளுமன்றத்திலே நடைபெற்ற நிகழ்ச்சி களை விமர்சிப்பது முறையல்ல. இருந்தாலும் சொல்லப்பட்டு இருக்கின்ற தகவல்கள் மிகைப்படுத்தி சொல்லப்பட்டவை. மாநில அரசுக்கு மத்திய அரசு எச்சரிக்கை அல்ல, முன்னறிவிப்பு செய்வது வாடிக்கை. இது ஒன்றும் புதிதல்ல. இப்படிப் பட்ட நிலைமைகள் ஏற்படக்கூடும். எனவே ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று முன்னறிவிப்பு செய்வதும், அதற்கான பதிலை மாநில அரசு மத்திய அரசுக்கு அனுப்புவதும் வாடிக்கை யானது, இயல்பானது. அந்த வகையிலே மாநில அரசு மத்திய அரசோடு தொடர்பு கொண்டு இங்கு நடக்கின்ற நிலைமைகளை எல்லாம் அடிக்கடி எடுத்துச் சொல்லி வருகிறது.

அண்மையிலே கூட அங்கே நடைபெற்ற மாநாட்டிற்கு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சென்ற போது, நான் இங்கே அவையிலே அறிவித்ததற்கிணங்க, அவர் வெளியுறவு அமைச்சரைச் சந்தித்து, இங்கே கடல் எல்லை இன்னும் சரியாகக் குறிப்பிடப்படாத காரணத்தால், அதைத் தெரிந்துகொள்கின்ற நிலை, தமிழ்நாட்டு மீனவ மக்களுக்கு இல்லாத காரணத்தால், அதை அவர்களுக்கு விளக்குகின்ற வகை யிலே அங்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று வெளியுறவுத் துறை அமைச்சரிடத்திலே நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கூறியிருக்கிறார். அது மாத்திரமல்ல. தமிழக அரசின் சார்பாக மத்திய அரசுக்கு ''கோஸ்ட் கார்டு'' ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரையிலே மத்திய அரசு அதற் கான நடவடிக்கையிலே ஈடுபடவில்லை. அதற்கான முயற்சி களை எடுக்கவில்லை என்பது தான் நமக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஏனென்றால் இன்றைக்கு இலங்கையிலே, தமிழ் ஈழத்திலே விடுதலைப் புலிகளுடைய செல்வாக்கு இருக்கலாம். கிட்டத்தட்ட அவர்களுடைய ஆட்சியே நடைபெறுவது போன்ற ஒரு நிலை. நாளைய தினம் எதிர்காலத்திலே, அவர்களுக்கும், இலங்கை அரசுக்கும் எத்தகைய சூழல் உரு வாகும் என்று நாம் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட ஒரு சூழல் உருவாகிற நேரத்தில் இங்கே ''கோஸ்ட் கார்டு'' மிக அவசியம் என்பதும் ''நாவாய்-நேவிகள்'' இங்கே நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்பதும் மிக அவசியம் என்பதை மத்திய அரசுக்கு நாம் எடுத்துச் சொல்லி இருக்கிறோம்.

10.15 மணி

ஆனால், தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகள் ஆதிக்கம் இருப்பதாகச் சொல்லப்படுவது கடைந்து எடுத்த, உண்மைக்கு மாறான ஒரு செய்தி ஆகும். பொய் என்று கூடச் சொல்ல

லாம். ஏன் என்றால், இங்கே உறுப்பினர்கள் சொன்னது ''பொய்'' என்று சொன்னால் தான் குற்றம். ஆனால் பத்திரிகைகளில் வெளிவருவது, அதைப்பற்றிப் பிரச்சாரம் செய்வது எல்லாம் கடைந்து எடுத்த பொய், இன்னும் சொல்லப் போனால் வடிகட்டிய பொய், இன்னும் சொல்லப்போனால் ஜமக்காளத்தில் வடிகட்டிய பொய் என்று தான் அதைச் சொல்ல வேண்டும். தமிழ்நாட்டிலே விடுதலைப் புலிகளின் ஆதிக்கம் இருப்பதற்கு நியாயமே இல்லை. ஒரு காலத்திலே இங்கே பல முகாம்கள் இருந்தன. இன்னும் சொல்லப்போனால் இங்கே எந்த முகாம்களும் கிடையாது என்று அன்றைய பிரதமர் அன்னை இந்திரா காந்தி அவர்கள் அறிவித்த அந்தக் காலக் கட்டத்திலே தமிழ்நாட்டில் 36 முகாம்கள் இருந்தன. 36 கேம்புகள் இருந்தன. அதிலே பயிற்சி பெற்ற வர்கள், டெலோ, ஈராஸ், இ.பி.ஆர்.எல். எப்., பிளாட் போன்றவர்கள். எல்.டி.டி.இ. அல்ல. எல்.டி.டி.யினுடைய கொள்கையே அவர்கள் இந்தியாவிலே பயிற்சி பெறக்கூடாது என்பது ஆகும். எனவே, அவர்கள் இங்கே எந்த கேம்பும் நடத்தவில்லை. அவர்கள் இங்கே புழங்கிக்கொண்டு இருந்தார் கள்; சிலர் இங்கே தங்கி நடமாடிக்கொண்டு இருந்தார்கள் அன்றைக்கு இருந்த அரசோடு, இங்கே இருந்த அரசியல். கட்சித் தலைவர்களோடு எல்லாம் கூட தொடர்பு கொண்டு இருந்தார்கள். அவர்களுக்குக் கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய் ஒரே நாளில் தமிழக அரசின் சார்பிலே கூட வழங்கப்பட் டிருக்கிறது. அதை அவர்கள் ஆயுதங்கள் வாங்கப் பயன்படுத்திக்கொண்டார்கள் என்பதற்கான தகவல்கள் எல்லாம் அன்றைக்கு வெளிவந்திருக்கின்றன. இப்படி 36 கேம்புகளை இங்கே அவர்கள் நடத்தி வந்த காலத்திலே கூட இந்திரா காந்தி அவர்கள் கேம்புகளே இங்கே இல்லை என்று சொன் னார்கள்.

இன்றைக்கு நான் சொல்லுவது அந்த அடிப்படையிலே அல்ல. உண்மையிலேயே கேம்புகள் இல்லை. அப்படி ஓரிரு கேம்புகள் இருந்தாலும் அவர்கள் வேறு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. அதிலே இருந்தவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். அவர்கள் மாத்திரமல்ல. விடுதலைப் புலிகளே கூட அப்படி கேம்பு நடத்தினால், அது கண்டுபிடிக்கப் பட்டால் அல்லது யாராலாவது சுட்டிக்காட்டப்பட்டால், அன்றைக்கு நம்முடைய திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் சொன்னது போல் உடுமலைப்பேட்டைக்குப் பக்கத்திலே இருப்பதாகச் சொன்னார்கள். மறுநாளே அங்கே அதைப்பற்றி ஆராயச சொல்லப்பட்டது. எதுவும் இல்லை என்ற தகவல் தான் கிடைத்தது. அப்படி ஏதாவது இருந்தால்,

உடனடியாக அடையாளம் காட்டப்பட்டால், அவர்கள் விடுதலைப் புலிகளாக இருந்தாலும், யாராக இருந்தாலும், நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமாத்திரம் அல்ல, இங்கே 20 திராவிடர் கழகத் தோழர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களுக்கும் விடுதலைப் புலிகள் பயிற்சி அளிக்கிறார்கள் என்று கூட அங்கே சொல்லப்பட்டிருக்கிறது. போயும், போயும் 20 பேருக்குப் பயிற்சி அளித்து என்ன செய்வார்கள் என்று எனக்குப் புரியவில்லை. திராவிடர் கழகமோ அல்லது திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களோ அப்படிப்பட்ட வன்முறைப் பயிற்சியிலே நாட்டம் கொண்டவர்கள் அல்ல. அப்படிப்பட்ட வன்முறைப் பயிற்சிக்கு அவர்கள் தங்களை ஆளாக்கிக் கொண்டவர்கள் அல்ல. அப்படி எல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தை பேரறிஞர் அண்ணா அவர்கள் வளர்க்கவில்லை என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். யாருக்காவது சந்தேகம் இருக்குமானால் பத்திரிகையாளர்கள் அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் கூட, நாம் எல்லாம் சேர்ந்து ஒரு குழுவாகக் கூட இந்தக் கடற்கரை பக்கத்திலே செல்லலாம். வேதாரண்யம் பகுதியிலே, சட்டமன்ற உறுப்பினர் நம்முடைய திரு. இராஜேந்திரன் என்னோடு வரலாம், அதேபோல் நாகப்பட்டிணம் பகுதியிலே திரு. வீரையன் அவர்கள் என்னோடு வரலாம். அல்லது சட்டமன்றத்தில் உள்ள உறுப்பினர்கள் எல்லாம் ஒரு குழுவாகக் கூட என்னுடைய தலைமையிலே—என்னுடைய தலைமையை இந்தக் குழுவுக்கு ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறேன்—அனைவரும் என்னோடு வந்தால் நாமே கூட அந்தக் கடற்கரைப் பகுதியிலே சென்று தவறு இருந்தால் அதைக் களைவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது; அல்லது பத்திரிகை நிருபர்கள் கூட ஒரு குழுவாக வந்தால் அவர்களோடு சென்று பார்வையிடக்கூட நான் தயாராக இருக்கிறேன். வேண்டும் என்றே இந்த அரசுக்கு ஒரு களங்கம் கற்பிக்க, சட்டம்-ஒழுங்கு, அமைதி இங்கே கெடுகிறது என்ற ஒரு நிலையை உருவாக்கி, மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் ஒரு மோதுதலை உருவாக்க சில பேர் நடத்துகின்ற முயற்சி நிச்சயமாக வெற்றி அடையாது என்பதையும் நான் இங்கே பேசிய இந்தக் கருத்துக்களே மத்திய அரசுக்கு நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதங்களுக்கு ஏற்ற பதிலாக அமையும் என்று நான் கருதுகிறேன். இங்கு எந்தத் தீவிரவாதங்களையும், எந்த வன்முறைகளையும் இந்த அரசு அனுமதிப்பதற்குத் தயாராக இல்லை.

[டாக்டர் மு. கருணாநிதி] [1990 மே 8

விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டில் வந்து செல்வாக்கைப் பெறவேண்டிய அவசியம் இல்லை. காரணம் அவர்கள், இன்றைக்குச் செல்வாக்கைப் பெற்றவர்களாக தமிழ் ஈழத்திலே, கிட்டத்தட்ட தமிழ் ஈழம் கிடைக்கவில்லையே தவிர, அந்தப் பெயர் கிடைக்கவில்லையே தவிர, அவர்களுடைய ஆட்சிதான் அங்கே இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அவர்கள் தமிழ்நாட்டில் வந்து இடம் தேட வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10-20 மணி

*திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது ஒரு கொள்கை விளக்கத்தை இந்த அவைக்குத் தந்து இருக்கிறார்கள். அதிலே அவர்கள் குறிப்பிடுகின்றபோது மத்திய அரசு மீண்டும் மீண்டும் கேட்டும் "Coast Guard" என்று சொல்லக்கூடிய கடற்கரைப் பாதுகாப்புப் படையும், நேவி இந்திய இராணுவத்தில் இருக்கக்கூடிய பகுதியாகிய நாவாய் அடங்கிய படை வகுப்பும் மீண்டும் மீண்டும் மத்திய அரசிடம் கேட்டு வரவில்லை என்று அவர்கள் ஆதங்கத்தோடு சொன்னார்கள். இன்றையதினம் பாராளுமன்றத்திலே ஒரு தகவல் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. தளபதி கல்கத் அவர்கள் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மற்ற அமைச்சர்களும் இந்திய இராணுவத்தை குறைத்துப் பேசியதை சுட்டிக்காட்டி மத்திய அரசுக்கு ஒரு கடிதம் எழுதியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதனால் இந்திய இராணுவத்தைச் சார்ந்த அந்த வீரர்கள் இங்கே தமிழகத்தின் பாதுகாப்புக்காக வர அஞ்சுகிறார்களோ என்கின்ற ஐயமும் எங்களுக்கு இருக்கிறது. இதுசம்பந்தமாக ஏதேனும் தகவல்கள், நமது மாண்புமிகு முதலமைச்சரிடம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறதா என்று நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசு கடற்படையை (Coast Guard) இன்னும் அனுப்பவில்லை என்று ஆதங்கத்தோடு சொன்னேன் என்று பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் ஒரு கற்பனைச் செய்தியை இங்கே சொன்னார்கள். நான் ஆதங்கத்தோடு சொல்லவில்லை; ஆர்வத்தோடு சொன்னேன். உடனடியாக அவர்கள் அனுப்ப வேண்டுமென்ற ஒரு செய்தியைத்தான் சொன்னேனேயல்லாமல் வேறு அல்ல. அவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். யாரோ கல்கத் தளபதி இவர்களெல்லாம் தமிழக முதலமைச்சரைப்பற்றிக் குறை கூறி, டெல்லியிலே உள்ள மத்திய அரசுக்கு எழுதி இருப்பதாக அவர்கள் சொன்னார்கள். நான் இன்றைக்கும் சொல்லுகிறேன். இந்திய இராணுவத்தை நான் குறை கூறிப் பேசவில்லை. இந்திய இராணுவத்தை வரவேற்க ஏன் செல்லவில்லை என்று கேட்டதற்குத்தான் பதில் சொன்னேனேயல்லாமல் நான் செல்லாததற்குக் காரணத்தைச் சொன்னேன். என்றைக்

கும் நான் இந்திய இராணுவத்தைக் குறை கூறிப் பேசவில்லை. ஆனால் குறை கூறுவது தவறு அல்ல. முன்னாள் குடியரசுத் தலைவர் ஜெயில்சிங்கே, இந்திய இராணுவ நடவடிக்கைக்காக அமிர்தசரஸ் கோயிலுக்குச் சென்று வருத்தம் தெரிவித்துக் கொண்டார். அவர்தான் முப்படையினுடைய தலைவர். அவரே வருத்தம் தெரிவித்துக் கொண்டார் என்ற விளக்கங்களையும் இங்கே நான் அளித்திருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால், மத்திய அமைச்சரவையிலே இடம் பெற்றிருக்கிற தோழர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் இந்திய அமைதிப் படையைப் பற்றிப் பேசியது, எழுதிய கட்டுரையெல்லாம் அண்மையிலே வெளியிடப்பட்டு புத்தகமாக வந்திருக்கிறது. ''மைலாய்'' என்கின்ற அந்தப் புத்தகத்திலே வந்திருக்கிறது. எவ்வளவு கொடுமைகள் அந்தப் பகுதியிலே நடைபெற்றன என்று இந்திய அமைதிப் படையைப் பற்றி ஜார்ஜ் பெர்னாண்டஸ், இன்றைக்கு மத்தியிலே அமைச்சராக இருப்பவர், அவர் எழுதிய கட்டுரையில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஒருவேளை முதலமைச்சர் குறை கூறிய காரணத்தாலே இங்கே இராணுவத்தினர் வர அஞ்சுகிறார்களோ என்று ஆல்போன்ஸ் அவர்கள் கேட்டார்கள். போலீஸ் மானியத்திலே போலீஸை இவ்வளவு குறை கூறினீர்களே, அதற்காகப் போலீஸ் வராமலா இருந்துவிடும்?

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே தருகின்ற விளக்கத்தின்போது மத்திய அமைச்சர் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் இந்திய அமைதி காக்கும் படையைப் பற்றி ''மை லாய்'' என்கின்ற புத்தகத்திலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வாதத்தை வளர்க்க வேண்டாம். ஏற்கெனவே சொன்ன செய்தியிலே உங்களுக்கு ஏதாவது ''Clarification'' இருந்தால் சொல்லுங்கள். இவையெல்லாம் துணைச் செய்திகள். ஒவ்வொன்றுக்கும் வாதம் வேண்டாம். (குறுக்கீடு). முதலிலேயே நீங்கள் எழுந்தீர்கள். (குறுக்கீடு) குறை சொல்ல வேண்டுமென்று சொல்லவில்லை. முதலிலே நீங்கள் எழுந்தீர்கள். உங்களுக்கு நான் அனுமதி தருகிறேன் என்று சொன்னேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக்கட்டுரையில், கட்டுரையல்ல. அந்த 'மை லாய்' என்கின்ற தலைப்பிட்ட அந்தப் புத்தகத்தினுடைய முகப்புரையில், வியட்நாமில் அமெரிக்க இராணுவம் 'மை லாய்' என்கின்ற ஒரு கிராமத்தில் 2 ஆயிரம், 3 ஆயிரம் மக்களை, ஒரு கிராமத்தையே கூண்டோடு, குழந்தை குட்டிகள் அனைத்தையும் ஒழித்துத் தள்ளியது. அது 'மை லாய்' என்கின்ற தலைப்பில் வெல்வெட்டித்

துறையில் 72 பேர்கள் கொல்லப்பட்டதை "My lay of Sri Lanka" என்று போட்டு அதைப்பற்றி எழுதியிருக்கிறாரே தவிர, ஒரு குறிப்பிட்ட குற்றச்சாட்டாக அது இல்லையென்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, எனக்குத் துணை நின்றதற்காக தம்பி இராஜேந்திரனுக்கு நன்றி.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு விளக்கங்களைத்தந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஏற்கெனவே சொன்னது போன்று ராஜிவ்காந்தி இராணுவம், வி.பி. சிங் இராணுவம் என்று பிரித்துப் பேசுவது சரியா என்பதைத்தான்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவை ஏற்கெனவே பேசி முடிக்கப்பட்ட செய்திகள். வேறு செய்தி ஏதாவது இருந்தால் சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். பேசியதையே திருப்பித் திருப்பிப் பேசக்கூடாது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே விளக்கமாக பதில் அளித்த போது எந்த முகாமாவது இருந்தால் இங்கே சுட்டிக்காட்ட வேண்டுமென்று சொன்னார்கள், அது யார் நடத்துகின்ற முகாமாக இருந்தாலும். அண்மையிலே, எனக்கு குற்றாலத்திற்கு அருகே இருக்கின்ற பானதீர்த்தத்திலே ஒரு முகாம் நடப்பதாகத் தகவல் வந்ததை வைத்து நான் அங்கே இருக்கின்ற எமது அமைப்பைச் சார்ந்தவர்களைக் கேட்டபோது பாபநாசம் அருவிக்கு குளிக்கப் போகின்றவர்கள், அதைத்தாண்டி முண்டந்துறை என்ற இடத்திற்குப் புலிகளைப் பார்க்கப் போவார்கள். சாதாரணமான புலிகளைத்தான், டைகர்ஸ். அந்தப் புலிகளைப் பார்க்கவேண்டுமென்று அவர்கள் கட்டணம் செலுத்தி உள்ளே போகப் போகிறபோது நீங்கள் எந்தப் புலிகளைப் பார்க்கப் போகிறீர்கள்? 4 கால் புலிகளையா அல்லது இரண்டு கால் புலிகளையா என்று சொன்னதற்கு இணங்க அந்த ஐயம் வலுப்பட்டு பிறகு போனபோது, அது புலிகள் என்றும் தெரியவில்லை. இன்னும் ஒருபடி மேலே போய் சொன்னால், கேரளம் வழியாக ஆந்திராவிலே இருந்து வருகிற நக்ஸலைட்டுகள் என்றும் சொல்கிறார்கள். ஏனென்றால், நமது அரசாங்கத்திற்குத் துணை நிற்க வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அவர்கள், அந்த லோயர் அணைக்கட்டு, அப்பர் அணைக்கட்டு, முண்டந்துறை மற்றும் அங்கேயிருக்கின்ற சொரிமுத்தன் கோயில் என்று சொல்லப்படுகின்ற இடங்களையெல்லாம் தாண்டி ஏறத்தாழ $3\frac{1}{2}$ கிலோ மீட்டர் தண்ணீரிலே கடந்து, பானதீர்த்தத்திலே ஒரு முகாம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அந்த பானதீர்த்தத்திலே இருக்கிற முகாம் யாருடையது என்று தெரியாது.

1990 மே 8] [திரு. குமரி அனந்தன்]

உண்மையிலேயே முகாம் இருக்கிறதா, அப்படி இருக்கிறதா என்று நீங்கள் ஒற்றர்களை வைத்தோ அல்லது நமது அதிகாரிகளை வைத்தோ ஆராய்ந்து நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

10-25 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்களே அதிலே ஒரு தெளிவான நிலையை எடுத்துச் சொல்ல முடிய வில்லை. அவர்கள் ஒருவேளை நக்ஸலைட்டாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தோடு தான், அவர் சொல்கிறார். தயவு செய்து யாரும் தப்பாக எண்ணிக் கொள்ளக் கூடாது. ஒரு பொது அறிவோடு இதை எண்ணிப் பார்த்தால் இப்போது விடுதலைப் புலிகள் தமிழ்நாட்டிலோ அல்லது வேறு இடத்திலோ அடைக் கலம் புகுந்து ஒளிந்து வாழவேண்டிய அவசியம் என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் இப்போது அங்கே ராஜாக் களாக இருக்கிறார்கள். எனவே, இங்கே வந்து அவர்கள் ஒளிந்து வாழ வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பெரிய விவாதம் எல்லாம் வேண்டாம். உங்களுடைய "Point of Order" என்ன?

*திரு. ரா. சொக்கர் : ஒரு பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தைப் பாதுகாப்பதற்காக எடுக்கப் பட்ட நடவடிக்கை பற்றி அளித்த விளக்கத்தை நாங்கள் மனப் பூர்வமாக ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் விளக்கம் சொல்கிற போது ஒன்றைச் சொன்னார்கள். திருமதி இந்திரா காந்தி காலத் திலே பல தீவிரவாதிகளுக்கு இங்கே வைத்து பயிற்சி கொடுக்கப் பட்டதாகச் சொன்னார்கள். இது சர்வதேசப் பிரச்சினை. இலங்கைக்கும், இந்தியாவுக்கும் உள்ள பிரச்சினை. இந்தப் பிரச்சினை முடிந்தால் சரி, முடியவில்லை என்றால் சர்வதேச நீதிமன்றம் வரையில் போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த நேரத்தில் இலங்கை அரசாங்கம், இந்திய அரசாங்கத்தைக் குறை கூறுவதற்கு ஒரு டாக்குமென்டரி எவிடன்சாக இங்கே முதல்வர் அவர்கள் கூறியதைச் சொன்னால் இந்தியா குற்றம் சாட்டப்படும். ஆகவே இதைப் பொறுத்து ஒரு முடிவு எடுக்க முதல்வர் அவர் களிடமே நான் விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பகிரங்க ரகசியமாக இருந்தது. நான் மேலும் விளக்கம் சொல்ல அவர்கள் வழி வைத்து விட்டார்கள். ''இந்தியா டுடே'' ஏடு, படங்களோடு, அந்த முகாம்களின் படங்களோடு அப்போது வெளியிட்டது. ஆனால் அதை எல்லோரும் ரகசியம் என்று எண்ணிக்கொண்டு இருந்தார்கள். அந்தச் செய்தி அவர்களுக்கு எப்படிக் கிடைத்தது என்றால் ''ரா'' அதிகாரிகளுடைய அலுவலகத்திலேயே மேப்பிலே அந்தப் படத்தைப் போட்டு மாட்டி வைத்திருந்தார்கள். அதைத்தான் 'இந்தியா டுடே' வெளியிட்டிருந்தது. இப்போதும் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் ஏதாவது ஒரு தகராறு வர வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள்—நான் பகிரங்கமாகவே குற்றம் சாட்டுகிறேன். அன்றைக்கு இலங்கைத் தமிழரிடத்தில் எப்படி ஒரு வேற்றுமையை வளர்ப்பதற்குக் காரணமாக இருந்தார்களோ, அதே ''ரா'' குழுவினர்தான் இன்றைக்கும்—இந்தக் காரியத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்பதை பகிரங்கமாகவே சொல்லிக் கொள்ள நான் விரும்புகிறேன். இது இந்தியப் பிரதமர் உணர்ந்து ஏற்ற நடவடிக்கை எடுக்க வேண்டிய ஒன்றாகும்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தஞ்சை மாவட்டம் நந்தமங்கலம் கிராமத்தில் இரு வகுப்பினரிடையே ஏற்பட்ட கலவரம் குறித்து,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கோ. வீரையன், திரு. சோ. அழகர்சாமி, திரு. ஜி. பழனிச்சாமி, திரு. ரெ. பிச்சைமுத்து, திரு. ஆர். சிங்காரம் ஆகியோர் ''தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டம் ஒரத்தூர் கிராமத்தில் 5-5-1990 அன்று இரு வகுப்பினருக்கிடையே நடந்த மோதலில் ஒருவர் கவலைக்கிடமாக இருப்பது மற்றும் அதனால் அந்தப் பகுதியில் ஏற்பட்ட சூழ்நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு முன் அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இதுகுறித்து திரு. துரை சந்திரசேகரன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பும் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி திரு. வீரையன் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், திருவையாறு வட்டம், ஒரத்தூரில் நந்தமங்கலம் என்ற கிராமத்தில் அரிசனத் தெருவில் 21-3-1990 அன்று ஒரு இறுதிச் சடங்கு நடந்தபோது அரிசனங்களுக்கும், அங்கே இருக்கக் கூடிய மிராசுதாரர்களுக்கும் சிறு தகராறு ஏற்பட்டது. இதுகுறித்து அரிசனங்கள் தரப்பிலே ஒரு